**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**O.S.No. 200/2021**

நாள் 27.01.2025

PW1 – மணி

க/பெ – சின்னசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2025.)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தாத்தா லட்சுமண கவுண்டர் அவர் கிரையமாக வாங்கிய சொத்தை அவருடைய மகனான ராமசாமி கவுண்டர், அவருடைய மகன் சாமிநாதன் பெயருக்கு கடந்த 15.03.2010–ம் தேதியில் உயில் சாசன ஆவணம் எழுதி கொடுத்து விட்டார் என்றால் அது எனக்குத் தெரியாது. அதேபோல் நானும், எனது சகோதரியும் சேர்ந்து 24.11.2014–ம் தேதியிட்ட பதிவு விடுதலை ஆவணத்தை எனது சகோதரர் சாமிநாதன் பெயருக்கு எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். அதனால் பூர்வீக சொத்துக்கள் மற்றும் கிரைய சொத்துக்களில் எங்களுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நாங்கள் பூர்வீக சொத்திற்கு விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துவிட்ட பின்பு எனது சகோதரர் சாமிநாதன் பெயரில் ஏற்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை செல்லாது என்று பரிகாரம் கோர எங்களுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. சாமிநாதன் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து அவரது மனைவி பெயருக்கு கடந்த 12.01.2021–ம் தேதியிட்ட உயில் ஆவணத்தை எழுதி வைத்துவிட்டு இறந்து போய்விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா சொத்துக்களில் எங்களுக்கு சட்டப்படி எவ்வித பாகபாத்திய உரிமையும் கிடையாது என்று சொன்னால்

சரியல்ல. அதனால் இந்த பாக தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால்சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.01.26 15:06:56 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**